1987 மே 5]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, என்ன வியாபாரம் செய்கிறார்கள் என்பது கூட அல்ல, ஆக்கிரமிப்பாளர்கள் அகற்றப்பட வேண்டும். அதில் அரசு உறுதியாக இருக்கிறது.

திரு. வி. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவ்வாறு ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்ட பகுதியைப் பேரூராட்சிகளுக்குக் கொடுத்தால் அங்கே அங்காடிகள் கட்டி அந்தப் பேரூராட்சியினுடைய வருமானத்தைப் பெருக்குவதற்கு வசதியாக இருக்கும். எனவே, அந்த இடங்களைப் பேரூராட்சிகளுக்குக் கொடுப்பதற்கு அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, நல்ல யோசனை.

இராமநாதபுரம் மாவட்டத்தில் புதிய அரசு தொழிற் பயிற்சிப் பள்ளி.

588—(*வினா எண் 9283) **திரு. கா. சொர்ணலிங்கம்**: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் புதிதாக அரசு தொழிற் பயிற்சிப் பள்ளி நிறுவும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

(இ) எங்கு அமைக்கப்பட இருக்கிறது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ), (ஆ) மற்றும் (இ) 1—7—1986 நாளிட்ட வேலைவாய்ப்பு பணித் துறை அரசு ஆணை எண் 175-ல் இராமநாதபுரம் மாவட்டம் இராமநாதபுரத்தில் ஒரு புதிய அரசு தொழிற் பயிற்சி நிலையம் துவங்க ஆணை பிறப்பிக்கப்பட்டு அந்த இடத்தில் பயிற்சி நிலையம் இயங்கிக் கொண்டிருக்கிறது.